மனிதவள மேலாண்மை (ஏ) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
குரோதி, புரட்டாசி - 17,
திருவள்ளுவர் ஆண்டு 2055.

<u>கடித எண் 6648/ஏ2/2024-1 நாள் 03.10.2024</u>

அனுப்புநர்
அ.ஜெ.ராஜன், பி.எஸ்சி., பி.எட்., எம்.ஏ.,
அரசு சார்புச் செயலாளர்.

பெறுநர்
திரு.N.S.செல்வராஜ்,
நிறுவன பொதுச் செயலாளர்,
மக்கள் உரிமை நுகர்வோர் பாதுகாப்பு மையம்,
N.S.நகர், எலவனாசூர் கோட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம் - 607 202.

ஐயா,

பொருள்: மனுக்கள் - அரசு அலுவலர்கள் அனைவரும் அடையாள அட்டை அணிந்து பணியாற்ற நடவடிக்கை எடுப்பது - தொடர்பாக.

பார்வை: தங்களின் மனு நாள் 21.09.2024 (இத்துறையில் பெறப்பட்ட நாள் 27.09.2024).

---

பார்வையில் காணும் மனுவின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வையில் காணும் மனுவில் உள்ள தங்களின் கோரிக்கை தொடர்பாக பின்வருமாறு பதிலளிக்கப்படுகிறது:-

-அரசு ஊழியர்கள் அனைவரும் அலுவலக நேரத்தில் தவறாமல் புகைப்பட அடையாள அட்டையைக் கட்டாயம் அணிய வேண்டும் என்பதை வலியுறுத்தி அனைத்துத் துறைகளின் தலைவர்களுக்கும் அரசு அவ்வப்போது ஆணைகள்/அறிவுறுத்தங்களைப் பிறப்பித்து வருகிறது. மேலும், அரசுக் கடித எண் 5550/ஏ2/2020-1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (ஏ) துறை, நாள் 19.02.2020-இல், அடையாள அட்டை அணிவது தொடர்பான அறிவுறுத்தங்கள் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அவ்வரசுக்கடிதத்தில் அனைத்துத் துறைத் தலைவர்கள்/மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள கீழ்நிலை அலுவலகங்களுக்கு அரசு ஆணைகள்/அறிவுறுத்தங்களின்படி, பணியாளர்கள், புகைப்பட அடையாள அட்டையைத் தவறாமல் அணியுமாறு அறிவுறுத்தியும் அவ்வாறு புகைப்பட அடையாள அட்டைகளை அணியாதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவ்வரசாணை/அறிவுரைகள் பின்பற்றப்படாத நேர்வுகளில், பொதுமக்கள் தகுந்த நடவடிக்கை மற்றும் தீர்வுக்காக அலுவலகத் தலைவர் / அல்லது சம்பந்தப்பட்ட அலுவலகம்/துறைத் தலைவர் ஆகியோரை அணுகி தீர்வு பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு சார்புச் செயலாளருக்காக.